கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.

கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்

தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 140 | 25-11-2025 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volum 01 | Issue: 140 | 25-11-2025 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

3 நாள் பயணத்தை முடித்து டெல்லி திரும்பினார்;

## தென்னாப்ரிக்காவில் ஜி20 மாநாடு நிலையான வளர்ச்சியை உருவாக்கும்: பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி: நவ.25–

3 நாள் பயணமாக ஜோகன்னஸ்பர்க்கிற்கு சென்று விட்டு பிரதமர் மோடி நேற்று டெல்லி திரும்பினார். அப்போது, ஜி20 மாநாடு, நிலையான வளர்ச்சியை உருவாக்கும் என்று தெரிவித்துள்ளார். தென்னாப்ரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கிற்கு 3 நாள் பயணமாக பிரதமர் மோடி சென்றிருந்தார். அங்கு, ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். இந்தியா பிரேசில் தென்னாப் ரிக்கா தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றினார். அந்நாட்டு அதிபர் சிறில் ராமபோசாவை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். அப்போது, வர்த்தகம், முதலீடு, அரிய வகை கனிமங்கள் இறக்குமதி, செயற்கை நுண்ணறிவு தொடர்பாக பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். இத்தாலியின் ஜியோர்ஜியா மெலோனி, ஜப்பானின் சனே டகைச்சி மற்றும் கனடாவின் மார்க் கார்னி உள்ளிட்ட பல உலக தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தினார்.

இந்நிலையில் தென்னாப்ரிக்கா பயணத்தை முடித்து கொண்டு பிரதமர் மோடி நேற்று புது டெல்லி திரும்பினார். இந்த பயணம் குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: வெற்றிகரமான ஜோகன்னஸ்பர்க் ஜி20 மாநாடு, நிலையான வளர்ச்சியை உருவாக்கும். உலக தலைவர்களுடனான எனது சந்திப்புகள் மிகவும் பயன் உள்ளதாக இருந்தன. மேலும் பல்வேறு நாடுகளுடனான இந்தியாவின் இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்தும். ஜி20 உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்ததற்காக தென்னாப்பிரிக்காவின் அற்புதமான மக்கள், அதிபர் சிறில் ராமபோசா மற்றும் அந்நாட்டு அரசுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாறு பிரதமர் கூறியுள்ளார்.

## உச்ச நீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் பதவியேற்றார்; குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார் பிரதமர் மோடி வாழ்த்து!



டெல்லி: நவ.25–

உச்ச நீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் பதவியேற்றார். அவருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். புதிய தலைமை நீதிபதியாகப் பதவியேற்றுள்ள சூர்யா காந்த், 2027ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சுமார் 14 மாதங்களுக்கு மேல் இந்தப் பதவியில் வகிப்பார். பூடான், கென்யா, மலேசியா, மொரீஷியஸ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் தலைமை நீதிபதிகள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்கள் குடும்பத்தினருடன் இவ்விழாவில் பங்கேற்றனர்.

1962ம் ஆண்டு பிப்ரவரி 10ம் தேதி ஹரியானாவின் ஹிசார் பகுதியில் சூர்ய காந்த் பிறந்தார். ஹிசாரில் பள்ளிப் படிப்பு, கல்லூரி படிப்பை நிறைவு செய்த அவர் ரோத்தக் மற்றும் குருஷேத்திரா பல்கலைக்கழகத்தில் எல்எல்பி, எல்எல்எம் சட்டப் படிப்புகளை படித்தார். 1984ம் ஆண்டில் ஹிசார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராகபணியை தொடங்கினார். பின்னர் பஞ்சாப் ஹரியானா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றினார்.

கடந்த 2000ம் ஆண்டில் ஹரியானா அட்வகேட் ஜெனரலாக அவர் நியமிக்கப்பட்டார். கடந்த 2004ம் ஆண்டில் பஞ்சாப் ஹரியானா உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார். கடந்த 2018ம் ஆண்டில் இமாச்சல பிரதேச தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார். கடந்த 2019ம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக அவர் பதவியேற்றார். இந்தியாவின் 52வது தலைமை நீதிபதியாக இருந்த பி.ஆர்.கவாய் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) ஓய்வு பெற்றார்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவியேற்ற சூர்யகாந்த்க்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடி தெரிவித்துள்ள வாழ்த்து செய்தியில், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவியேற்றிருக்கும் சூர்யகாந்தின் பயணம் சிறக்க வாழ்த்துகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

## இந்தியா- சீனா எல்லைப் பகுதியில் 10 மகளிர் கண்காணிப்பு மையம் அமைக்க இந்தோ திபெத் எல்லை போலீஸ் திட்டம்

ஜம்மு: நவ.25–

இந்தியா சீனாவின் 3,488 கி.மீ தூர எல்லைப் பகுதியை கண்காணிக்கும் பொறுப்பில் இந்தோ திபெத் எல்லை போலீஸ்(ஐடிபிபி) ஈடுபட்டுள்ளது. இதில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். 9,000 அடி முதல் 14,000 அடி வரையுள்ள மலைப் பகுதிகளில் இவர்கள் பாதுகாப்பு பணியை மேற்கொள்கின்றனர். இந்நிலையில் ஐடிபிபியின் 64வது எழுச்சி தினம் ஜம்முவில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அதன் தலைமை இயக்குனர் பிரவீன் குமார் கலந்து கொண்டு பேசியதாவது: இந்தியா சீனா எல்லையில் முன்பு 180 கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இது தற்போது 215ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 7 புதிய பட்டாலியன்கள் அமைக்கப்பட்டதன் மூலம் இத்திட்டம் வலுப்பெற்றுள்ளது. இதன் மூலம் எல்லைப் பகுதி கண்காணிப்பு மேம்பட்டுள்ளது. மேலும் 41 கண்காணிப்பு மையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

இதில் 10 மையங்களில் முழுவதும் பெண் காவலர்கள் பணியாற்றுவர். லடாக்கில் உள்ள லூகுங் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தின் தாங்கி ஆகிய இடங்களிலும் பெண் காவலர்கள் பணியாற்றும் மையங்கள் அமைக்கப்படும்.எல்லைப் பகுதியில் மேலும் 8 மையங்களில் பெண்கள் பணியாற்றுவர். ஐடிபிபி பயிற்சி மையங்களில் வழங்கப்படும் பயிற்சிகள், மலைப் பகுதிகளில் பணியாற்றும் வகையில் மேம்படுத்தப்படும். இவ்வாறு பிரவீன் குமார் கூறினார்.

சீக்கிய குரு தேக் பகதூரின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழா

## பஞ்சாப் முதல்மந்திரிக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்




சென்னை, நவ.25–

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை கடந்த அக்டோபர் 17ந்தேதி தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில பொதுப்பணித் துறை மந்திரி எஸ்.ஹர்பஜன் சிங் மற்றும் பஞ்சாப் மாநில நீர்வளத்துறை மந்திரி பிரேந்தர் குமார் கோயல் ஆகியோர் சந்தித்து, பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெறும் ஒன்பதாவது சீக்கிய குரு தேக் பகதூரின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு வருகை தர அழைப்பு விடுத்தனர். இதனைத் தொடர்ந்து, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு அரசின் சார்பாக, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோரை அவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில், 23ந்தேதி(நேற்று) ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு தேக் பகதூரின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், பழனிவேல் தியாகராஜன் மற்றும் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதம் மற்றும் நினைவுப் பரிசை பஞ்சாப் மாநில முதல்மந்திரி பகவந்த் மானிடம் வழங்கினர். பஞ்சாப் முதல்மந்திரிக்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய அந்த கடிதத்தில், "குரு தேக் பகதூரின் 350வது தியாக தின நினைவேந்தல் விழாவில் கலந்துகொள்ளுமாறு எனக்கு அளித்த அழைப்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முக்கியமான நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், அமைச்சர் பழனிவேல் தியாகராஜனையும், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமியையும் எனது சார்பாக நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டேன். அவர்களை அன்புடன் வரவேற்க முன்வந்த தங்கள் நல்லெண்ணத்திற்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நினைவுப் பரிசினை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். விழா மிகச் சிறப்பாக நடைபெற எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். குரு தேக் பகதூர் நிலைநாட்டிய துணிச்சல், கருணை மற்றும் மத சுதந்திரம் ஆகிய உன்னத லட்சியங்களுக்கான தனது மரியாதையை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார். ",

## 2025-26ம் ஆண்டுக்கான மஞ்சப்பை விருது : விண்ணப்பங்களை வரவேற்கும் சென்னை ஆட்சியர்

சென்னை: நவ.25–

2025 – 2026 ஆம் ஆண்டிற்கான மஞ்சப்பை விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், 202223 நிதியாண்டிற்கான மஞ்சப்பை விருதுகளை சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்தார்.

ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் மீதான தடையை திறம்பட செயல்படுத்தி, ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் (SUP) கை பைகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து, மஞ்சப்பை போன்ற பாரம்பரிய சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பித்து, தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மற்றும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு இது வழங்கப்படும்.

முதல் பரிசாக ரூ. 10 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 5 லட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 3 லட்சம் வழங்கப்படும்.

இந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB), ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாகப் சுற்றுச்சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், தங்கள் வளாகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மூலம் தடையை அமல்படுத்துவதற்கும், வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றுவதற்கும் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த பள்ளிகள் / கல்லூரிகள் / வணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருதுகளை வழங்க முன்மொழிகிறது.

விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்திலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களின் அனைத்து இணைப்புகளிலும் தனிநபர் / அமைப்புத் தலைவர் முறையாக கையொப்பமிட வேண்டும்.

விண்ணப்பங்களின் மென் நகலுடன், இரண்டு அச்சுப் பிரதிகள் (கடின நகல்) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்.15.01.2026 ஆகும்" என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சபரிமலையில் மழையிலும் குவியும் பக்தர்கள்: உடனடி முன்பதிவு எண்ணிக்கை அதிகரிப்பு

திருவனந்தபுரம்: நவ.25–

சபரிமலையில் பலத்த மழையிலும் பக்தர்கள் தொடர்ந்து குவிந்து வருகின்றனர். கடந்த சில தினங்களாக உடனடி கவுன்டர்கள் மூலம் தரிசனத்திற்கு முன்பதிவு செய்யும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சபரிமலையில் முந்தைய வருடங்களை விட இந்த மண்டல காலத்தில் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தினமும் ஆன்லைன் மூலம் 70 ஆயிரம் பேருக்கும், உடனடி முன்பதிவு மூலம் 20 ஆயிரம் பேருக்கும் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் உடனடி கவுண்டர்களில் முன்பதிவு செய்யும் பக்தர்கள் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்ததால் சபரிமலையில் கடும் நெரிசல் ஏற்பட்டது. தொடர்ந்து கேரள உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் உடனடி முன்பதிவு எண்ணிக்கை இன்று வரை 5 ஆயிரமாக குறைக்கப்பட்டது.

இதன் பலனாக பக்தர்கள் வருகை சற்று கட்டுப்படுத்தப்பட்டது. நெரிசலும் குறைந்ததால் கடந்த சில நாட்களாக பக்தர்கள் எளிதில் தரிசனம் செய்து வருகின்றனர். அதைத் தொடர்ந்து உடனடி முன்பதிவு எண்ணிக்கையை ஒவ்வொரு நாளின் சூழ்நிலைக்கு ஏற்ப அதிகரித்துக் கொள்ள கேரள உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இதனால் கடந்த சில தினங்களாக 15 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் உடனடி கவுன்டர்களில் முன்பதிவு செய்து தரிசனம் செய்து வருகின்றனர். சபரிமலையில் கடந்த 8 நாட்களில் தரிசனம் செய்த பக்தர்கள் எண்ணிக்கை 7 லட்சத்தை தாண்டியுள்ளது. இதற்கிடையே சபரிமலையில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையை பொருட்படுத்தாமல் பக்தர்கள் சபரிமலையில் தரிசனம் செய்து வருகின்றனர்.

## கோயம்புத்தூரில் 'ஹோம் ஜோன்' புதிய பிரம்மாண்ட ஷோரூம் திறப்பு..




கோவை, நவ25

கோயம்புத்தூரின் முன்னணி பார்னிச்சர் விற்பனை நிறுவனமான ஹோம் ஜோன், ஒண்டிப்புதூரில் தனது புதிய 15,000 சதுர அடி பரப்பளவிலான பிரம்மாண்ட ஷோரூமினை திறந்தது. நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக வழக்கறிஞர் ஸ்ரீ. ஆர். அருணாச்சலம் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

நவீன வடிவமைப்பு மற்றும் அனுபவத்தை மையப்படுத்திய காட்சியகமாக அமைந்துள்ள ஷோரூமில் சோபாக்கள், ரிக்ளைனர்கள், ஹோம் தியேட்டர் சீட்டிங், டைனிங் செட்கள், படுக்கைகள், ஸ்டோரேஜ் யூனிட்கள், டெகோர் உள்ளிட்ட பல்வேறு பிரீமியம் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கோயம்புத்தூரின் முன்னணி "ஸ்டுடியோ ரிக்ளைன்" அனுபவ மையமும் இங்கு இணைக்கப் பட்டுள்ளது.

"உயர் தரத்தை நியாயமான விலையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதே எங்களின் குறிக்கோள் எனவும் இந்த புதிய ஷோரூம் மூலம் தேர்வு மிக எளிமையாகிறது,என இணை நிறுவனர் ரம்யா தெரிவித்தார்.

தொழிற்சாலையிலிருந்து நேரடி கொள்முதல், தனிப்பயன் சோபா தயாரிப்பு, விரைவு டெலிவரி மற்றும் விற்பனையுக்கு பிந்தைய சேவைகள் ஆகியவை ஹோம் ஜோனின் முக்கிய பலங்களாகும்.இதில் பிரீமியம் பொருட்களின் விரிவான காட்சிப்படுத்தல்,தனிப்பயன் சோபா – ரிக்ளைனர் தயாரிப்பு,ஹோம் தியேட்டர் அனுபவ மையம்,திறப்பு தின சிறப்பு தள்ளுபடிகள்,

பயிற்சிய பெற்ற பணியாளர்களின் ஆலோசனை வழங்கப்படுகிறது.

# தஞ்சையில் திமுகவுடன் மதசார்பற்ற கட்சிகளின் விவசாயிகள் ஒன்றிய அரசிற்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.



தஞ்சாவூர்..நவ 25

குருவைப் பட்டத்தில் நெல் அதிக விளைச்சல் இருந்தும் நல்ல கொள்முதல் இருந்தும் ஈரப்பதம் 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்த கோரிக்கை விடுத்து மதசார்பற்ற கூட்டணி கட்சிகளுடன் தஞ்சையில் திமுகவும் மதசார்பற்ற கூட்டணி கட்சிகளும் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர்.

விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள் முதலுக்கான ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தி ஆணை வழங்கிட வேண்டும் என்று மத்திய அரசிற்கு தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதியிருந்தார்.

தமிழக அரசு சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துவிட்டது இதனை அடுத்து நெலின் ஈரப்பத அளவை அதிகரிக்கா மலும் நிவாரணமும் அளிக்கா மல் டெல்டா விவசாயி களை வஞ்சிக்கும் மத்திய அரசை கண்டித்து.

தஞ்சையில் மத சார்பற்ற கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திமுக அறிவித்திருந்தது.

இதன் அடிப்படையில். தஞ்சை ரயிலடி அருகே தலைமை தபால் நிலையம் முன்பு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திமுக மத்திய மாவட்ட செயலாளர் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர். துரை சந்திரசேகர் வரவேற்புரை ஆற்றினார் . மாநில விவசாயிகள் அணி செயலாளர் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ கே எஸ் விஜயன் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

மாநில விவசாயிகள் அணி செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா முன்னிலை வகித்தார் . ஆர்ப்பாட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் அன்பழகன். சட்டமன்ற உறுப்பினர் தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் பழனிவேல் கழக உயர்நிலை திட்ட குழு உறுப்பினர் பழனி மாணிக்கம். மாநிலங்களவை உறுப்பினர் கல்யாண சுந்தரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம். தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் சுதா. சட்டமன்ற உறுப்பினர்கள் டி கே ஜி நீலமேகம் ஜவஹிருல்லா, அண்ணாதுரை அசோக்குமார் மேயர் சன்ராமநாதன் துணை மேயர் அஞ்சுகம் பூபதி கழகச் சட்ட திட்ட குழு உறுப்பினர் இறைவன். தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம் மதிமுக துணை பொதுச்செயலாளர் முருகன் இந்திய தேசிய காங்கிரஸ் தஞ்சை தெற்கு மாவட்ட தலைவர் கிருஷ்ணசாமி காங்கிரஸ் தஞ்சை வடக்கு மாவட்ட தலைவர் லோகநாதன் காங்கிரஸ் மாநகர மாவட்ட தலைவர் ராஜேந்திரன் திக தஞ்சை மாவட்ட தலைவர் அமர்சிங் மதிமுக தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் தமிழ்ச் செல்வன் சிபிஐ தஞ்சை மாவட்ட செயலாளர் சின்னை.பாண்டியன். விசிக மத்திய மாவட்ட செயலாளர் ஜெய்சங்கர்.


இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயினுலா புதீன் ஆகியோர் கலந்து கொண்டு ஆர்ப் பாட்டத்தில் உரையாற்றினர்.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற கட்சிகளைச் சேர்ந்த நிறைய பொறுப்பாளர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



சேலம் மாவ்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வாக்காளர் ப்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகளிர் திட்டம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்ட இருசக்கர வாகன பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்மு உதவியாளர் ஷாலினி, வட்டார போக்குவரத்து அலுவலர் கோகிலா ஆகியோர் உள்ளனர்.

# அருள்மிகு சித்தி விநாயகர் கோவில் திருக்குட நன்னீராட்டு விழா..



கோவை நவ:25

கோவை மாவட்டம் பேரூர் வட்டம் தொண்டாமுத்தூர் சந்தைப்பேட்டை பகுதியில் அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோவில் திருநெறிய தெய்வத்தமிழ் திருக்குட நன்னீராட்டு பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இது குறித்து கோவில் நிர்வாகம் தெரிவிக்கையில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில் 3 கும்பாபிஷேக விழாவாகும் 8 சிவாலய தீர்த்தங்கள் எடுத்துவரப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் பவானி, கோவில் அறங்காவலர் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் எஸ் பி வேலுமணி, கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து குளத்துப்பாளையம் வேல் மயிலும் கிராமிய கலை குழுவின் வள்ளி கும்மி நடைபெறும் தொண்டாமுத்தூர் நாளைய தலைமுறையின் ஜமாப் கலைக்குழுவின் நிகழ்ச்சி நடைபெறும் என்று தெரிவித்தனர். இதில் 5000க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தென்காசி அருகே பேருந்து விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு..!!

சென்னை: நவ.25–

தென்காசி அருகே பேருந்து விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், இடைக்கால் கிராமம், திருமங்கலம் – கொல்லம் தேசிய நெடுஞ் சாலையில் (24.11.2025) காலை சுமார் 11.00 மணியளவில் இரண்டு தனியார் பேருந்துகள் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் பேருந்துகளில் பயணம் செய்த ஐந்து பெண்கள் மற்றும் ஒரு ஆண் உட்பட ஆறு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு கடும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 56 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு தெரிவித்தார்.

# சேலத்தில் இன்று மின் தடை. எங்கெல்லாம் 8 மணிநேரம் பவர்கட் தெரியுமா?முழு விவரம்.

சேலம், நவ. 25–

பொதுமக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கும் பொருட்டு மின்வாரிய தரப்பில் மாதாந்திர முறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

அத்தகைய சமயங்களில் சம்பந்தப்பட்ட மின் பாதைகளை சேர்ந்த பகுதிகளில் மின் விநியோகம் தடை செய்யப்படும்.இது குறித்த முன்னறிவிப்பையும் மின் வாரியம் சம்பந்தப்பட்ட பகுதி மக்களுக்கு வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளது.

அந்தவகையில், சேலம் மாவட்டத்தின் பல்வேறு முக்கிய பகுதிகளில் இன்று (25.11.2025) செவ்வாய்க்கிழமை மின் வாரியம் மாதாந்திர மின் பாதை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவுள்ளது. இதன் காரணமாக, பின்வரும் பகுதிகளில் இன்று மின் தடை குறித்த முன்னறிவிப்பை மின் வாரியம் வழங்கியுள்ளது.

மின் தடை பகுதிகள்: சேலம் அஸ்தம்பட்டி துணை மின் நிலையத்தைச் சேர்ந்த அஸ்தம்பட்டி, காந்தி ரோடு,வின்சென்ட், மறவனேரி,மணக்காடு, சின்ன திருப்பதி,ராமநாதபுரம்,கன்னங்குறிச்சி, கொண்டப்ப நாயக்கன்பட்டி,ராமகிருஷ்ணா ரோடு,அழகாபுரம், ராஜாராம் நகர்,சங்கர் நகர்,நான்கு ரோடு, மிட்டா பெரிய புதூர்,சாரதா காலேஜ் ரோடு,செட்டி சாவடி, விநாயகம்பட்டி,நகர மலை அடிவாரம் ஆகிய பகுதிகள்.

மேற்கண்ட பகுதிகளில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் தேவையான மாற்று ஏற்பாடுகளை செய்துகொள்ளுமாறு மின் வாரியம் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# எஸ்.ஐ.ஆர்.பணிகள்: கூடுதல் அவகாசம் இல்லை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி பதில்",

"சென்னை, நவ.25–

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயகர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: தமிழகம் முழுவதும் 6.16 கோடி பேருக்கு எஸ்.ஐ.ஆர் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. எஸ்.ஐ.ஆர். நடைமுறையில் கூடுதல் அவகாசத்திற்கு வாய்ப்பில்லை. எஸ்.ஐ.ஆர் பணிகளை குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்க வேண்டும். கூடுதல் அவகாசம் இதுவரை கொடுக்கப்படவில்லை. படிவங்களை பெற்ற வாக்காளர்கள் முடிந்தவரை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். மக்களுக்கு அளிக்கப்பட்ட கணக்கீட்டுப்படிவங்களில் 50 சதவீதம் திரும்ப பெறப்பட்டுள்ளன.2 லட்சம் விண்ணப்பங்கள் ஆன்லைனில் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் எஸ்.ஐ.ஆர் படிவத்தில் நிச்சயம் பெயர் இருக்கும். கணக்கீட்டுப்படிவங்களில் தகவல்கள் சரியாக இருந்தால் எந்த படிவமும் நிராகரிக்கப்படாது. பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்தால் உரிய காரணம் தெரிவிக்கப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் எஸ்.ஐ.ஆர் படிவத்தில் நிச்சயம் பெயர் இருக்கும்.பெயர் இடம்பெறாவிட்டால் காரணம் தெரிவிக்க வேண்டும். எஸ்.ஐ.ஆர் ஆன்லைன் சர்வர் சரியாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒருவர் தவறான ஆவணத்தை கொடுக்கிறார் எனில் அதை பி. எல்.ஓக்கள்தான் கண்டுபிடிக்க முடியும். டிசம்பர் 4 வரை எஸ்.ஐ.ஆர் படிவங்கள் வழங்கும் பணி நடைபெறும். 33,000 தன்னார்வலர்கள், 88 ஆயிரம் பி.எல்.ஓ.க்கள் எஸ்.ஐ.ஆர் பணியில் ஈடுபட்டுள்ளனர். 327 பி.எல்.ஓக்கள் தங்கள் எஸ்.ஐ.ஆர் பணிகளை முழுமையாக நிறைவு செய்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட கட்சி மட்டும் படிவங்களை வாங்குவதாக குற்றச்சாட்டு வைப்பது தவறானது. தமிழகத்தில் வசிக்கும் வெளி மாநிலத்தவர் 869 பேர் இங்கு வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார். ",

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...




அமைசசர் மருத்துவர் மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் அண்ணா சாலை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்க பூமி பூஜையிட்டு பணிகளை தொடங்கி வைத்தர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் இராஜேஸ்குமார் உட்பட பலர் உள்ளனர்.

# சேலத்தில் 56அடி உயரம் பிரமாண்ட ராஜமுருகன் சிலை பிரதிஷ்டை.



சேலம், நவ. 25–

சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருகே அணைமேடு பகுதியில் அருள்மிகு ராஜ முருகன் சிலை 56 அடியில் பிரம்மாண்ட அமைக்க திட்டமிட்டு, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பணிகள் தொடங்கியது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக முருகன் சிலை அமைக்கப்பட்டபோது முனியப்பன் போன்று இருப்பதாக விமர்சனங்கள் எழுந்தது. இதனை அடுத்து கோவில் நிர்வாகம் 56 அடி உயரத்தில் அருள் மிகு ஸ்ரீ ராஜமுருகன் சிலையை மாற்றி அமைக்க முடிவு செய்தது.

பின்னர் 1 ஆண்டுக்கு முன்பு துவங்கப்பட்ட இந்த சிலை அமைக்கும் பணி கடந்த சில தினங்களுக்கு முன்பு நிறைவுபெற்றது. தற்போது கம்பீரமான முறையில் ராஜா அலங்காரத்தில் காட்சி அமைக்கும் விதமாக அமைக்கப்பட்டது, பக்தர்களுக்கு இடையே மிகுந்தவரவேற்பினையும் மகிழ்ச்சியினையும் ஏற்படுத்தியது.

இந்த நிலையில், சேலம் மாவட்டத்தில் இரண்டாவது அதிக உயரம் கொண்ட மிகப் பிரமாண்ட ராஜமுருகன் சிலைக்கு குடமுழுக்கு விழா நடைபெற்றது. இதனிடையே கடந்த 17 ஆம்தேதி முகூர்த்தக்கால் நடுதல், கங்கணம் கட்டுதலுடன் தொடங்கிய கும்பாபிஷேக விழாவில் நேற்றைய தினம் காலை மங்கள இசையுடன் கணபதி ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்கள் தீர்த்த குடம் எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து இன்று இரண்டாம் கால யாக பூஜைகள் நடத்தி, தீபாராதனை உடன் 56 அடி உயரம் கொண்ட ஸ்ரீ ராஜ முருகனுக்கு மகா கும்பாபிஷேகம், மகா அபிஷேகம் மற்றும் மகா தீபாராதனைகள் நடைபெற்றது. பெரிய கிரேன் வாகனம் மூலமாக முருகன் சிலைக்கு அருகே சென்று மகா கும்பாபிஷேக தீர்த்தம் ஊற்றப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு ராஜமுருகனை வழிபட்டனர். பின்னர் தீர்த்தம் மீது பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது.



நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் 2026 முன்னேற்றம் குறித்து அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

# நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழாவை முன்னிட்டு வரும் டிச. 1ம் தேதி நாகை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை!

நாகை: நவ.25–

நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழாவை முன்னிட்டு வரும் டிச. 1ம் தேதி நாகை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டம் நாகூரில் உலக பிரசித்தி பெற்ற ஆண்டவர் தர்கா உள்ளது. இந்த தர்காவிற்கு வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். மத நல்லிணத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த தர்காவில் ஆண்டு தோறும் பெரிய கந்தூரி விழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டுக்கான 469 வது பெரிய கந்தூரி விழா கடந்த 21ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக சந்தனக்கூடு ஊர்வலம் வருகிற 30ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. மறுநாள் 1ம் தேதி அதிகாலை பெரிய ஆண்டவர் சமாதிக்கு சந்தனம் பூசும்நிகழ்ச்சியும், கந்தூரி விழாவும் நடக்கிறது.

விழாவுக்கான ஏற்பாடுகளை தர்கா தலைமை அறங்காவலர் செய்யது முகம்மது காஜி ஹுசாஹிப் மற்றும் போர்டு ஆப் டிரஸ்டிகள் செய்து வருகின்றன. இந்நிலையில், நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழாவை முன்னிட்டு வரும் டிச. 1ம் தேதி நாகை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறையை ஈடு செய்யும் வகையில் டிச. 13ம் தேதி பணி நாளாக செயல்படும் என்று மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் அறிவித்துள்ளார்.

# அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி மற்றும் குகை நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்



சேலம், நவ. 25–

சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம், பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி மற்றும் குகை நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள். பின்னர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கென அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் மாநில அளவில் ரூ.7500 கோடி மதிப்பீட்டில் நவீனமாக்கும் திட்டம், இல்லம் தேடிக்கல்வி திட்டம் போன்ற திட்டங்கள் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், எண்ணும் எழுத்தும் இயக்கம், பள்ளி செல்லாப் பிள்ளைகளைக் கண்டறிய செயலி, உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள், வகுப்பறை உற்று நோக்கு செயலி, முத்தமிழறிஞர் மொழி பெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் என பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 14.11.2025 அன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கான மிதிவண்டிகள் வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் 2021 2022ஆம் கல்வி ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்ற 51,058 மாணவர்களுக்கும், 55,123 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 1,06,181 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 20252026 ஆம் கல்வி ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 178 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 11,317 மாணவர்களுக்கும். 13,842 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 25,159 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது..

இன்றையதினம், சேலம், பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி 172 மாணர்களுக்கும், 54 மாணவியர்களுக்கும், குகை நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 430 மாணவிகளுக்கும் என மொத்தம் 656 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய இதுபோன்ற பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி துணை மேயர் எம்.சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டலகுழு தலைவர் உமாராணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட கல்வி அலுவலர்கள் நரசிம்மன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 கணக்கெடுப்பு படிவத்தினை பதிவேற்றம் செய்யும் பணிகள் குறித்து பயிற்சி மற்றும் ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. அருகில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் திருமலை, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் செந்தில்முருகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கொடி உட்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இலட்சுமிபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்ய ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்வது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள வாக்காளர் உதவி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் திருவள்ளூர் நகராட்சி ஆணையயருமான தாமோதரன். உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் திருவள்ளூர் வட்டாட்சியருமான பாலாஜி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் வரும் 28 ம் தேதி நடைபெறும்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவிப்பு

திருவள்ளூர் நவ 25 :

திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் 28.11.2025 அன்று காலை 10 மணிக்கு நடத்திட மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் உத்தரவிட்டுள்ளார்.

எனவே, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் விவசாயம் தொடர்பாக தங்களுக்கும் தங்கள் பகுதிகளில் ஏற்படும் குறைகளுக்கும் தீர்வு காண மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும், இக்கூட்டத்தில் வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவுத்துறை, வங்கிகள், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மின்வாரியம், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சி, நகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறைகளின் மாவட்ட அளவிலான தலைமை அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

எனவே, இக்கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாய் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கடம்பத்தூர் அருகே 6 வயது குழந்தையை கடத்தி சென்ற இமாச்சல பிரதேசத்தை சேர்ந்த நபரை கைது செய்து போலீசார் விசாரணை

திருவள்ளூர் நவ 25 :

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் அடுத்த செஞ்சிபானம்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் எஸ்பெல்குமார், (45) இவரது மனைவி சுந்தரி, (40). சபரிமலை ஐயப்பனுக்கு விரதமிருந்து எஸ்பெல் குமார் கோவிலுக்கு செல்வதற்காக இருமுடி கட்ட அருகில் உள்ள கோவிலுக்கு மனைவியுடன் சென்றார். அப்போது தனது 6 வயது மகனை வீட்டில் உள்ள தாய் விஜயலட்சுமியிடம் விட்டு விட்டு சென்றார்.

அப்போது அங்கு வடமாநில நபர் ஒருவர் விஜயலட்சுமியுடன் மாடியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை பறித்து சென்றுள்ளார். இதையடுத்து விஜயலட்சுமியின் அலறலைக் கேட்ட எஸ்பெல்குமார் விரட்டி சென்று வடமாநில நபரை பிடித்தபோது அவர் குழந்தையை கீழே விட்டு தப்பியோடினார். இதனையடுத்து எஸ்பெல்குமார் கொடுத்த புகாரின்படி சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கடம்பத்தூர் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பின் அப்பகுதியில் ரோந்து சென்ற போது சந்தேகத்திற்கிடமான முறையில் சுற்றித்திரிந்த நபரை பிடித்து மேற்கொண்ட விசாரணையில் அந்த நபர் இமாச்சல்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த அமீத்குண்டல் (48) என்பதும் ஆறு வயது குழந்தையை திருடியது தெரிய வந்தது. இதையடுத்து கடம்பத்தூர் போலீசார் அந்த வடமாநில நபரை கைது செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தென்காசி பஸ் விபத்தில் 6 பேர் உயிரிழந்த செய்தி மன வேதனை அளிக்கிறது; தவெக தலைவர் விஜய்

சென்னை, நவ. 25–

“தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே இன்று இரு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்நிலையில், தென்காசி பஸ் விபத்தில் 6 பேர் உயிரிழந்த செய்தி மிகுந்த மன வேதனை அளிப்பதாக தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் அருகே தனியார் பேருந்துகள் மோதிக்கொண்ட விபத்தில், பெண்கள் உள்பட 6 பேர் உயிரிழந்த செய்தி, மிகுந்த மன வேதனையை அளிக்கிறது. அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் பூரணமாகக் குணமடையும் வகையில், தேவையான அனைத்து மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்தி, உயர்தரமான சிகிச்சை அளிக்க வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறேன். என தெரிவிக்கப்பட்டுள்ளது. “,

# சினிமா பாணியில் தாலி கட்டும் நேரத்தில் மணமகள் ஓட்டம். சோகத்தில் மூழ்கிய மணமகன்

சேலம், நவ. 25–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பகுதியை சேர்ந்த அரசு பள்ளி ஆசிரியர் ஒருவரின் 23 வயதான மகள், சென்னையில் தபால் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறார். தபால் அதிகாரியான பெண்ணுக்கு, சேலம் மேட்டுப்பட்டியை சேர்ந்த வேளாண்மைத்துறையில் பணியாற்றி வரும் அரசு ஊழியர் ஒருவருக்கும் பெற்றோர்களால் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சேலம் அருகே உள்ள ஒரு திருமண மண்டபத்தில் நேற்று திருமணம் நடத்த திட்டமிட்டு பணிகளை செய்து வந்தார்கள். திருமணத்தையொட்டி மணமக்கள் வரவேற்பு நிகழ்ச்சியும் நடந்தது. இதில் இருதரப்பு குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டார்கள். இதற்காக மணப்பெண், மணமகன் வீட்டார் நேற்று முன்தினம் மாலையே மண்டபத்திற்கு வந்துவிட்டார்கள்.

இந்த நிலையில் திருமணத்தன்று மணமகன் மணமேடையில் அமர்ந்திருந்த நிலையில் சடங்குகள் செய்வதற்காக, புரோகிதர் மணமகளை அழைத்திருக்கிறார். மணப்பெண்ணை அழைத்து வருவதற்காக அவரது அறைக்கு உறவினர்கள் சென்றனர். ஆனால் அறையில் மணப்பெண் இல்லை. மண்டபத்தில் இருந்து மணப்பெண் திடீரென காணாமல் போய்விட்டார்.

மணப்பெண்ணை காணவில்லை என உறவினர்கள் மண்டபம் முழுவதும் தேடினர். செல்போன் எண்ணை தொடர்பு கொண்ட போது போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையே மணப்பெண் தனது தாய்க்கு வாட்ஸ் அப்பில் ஒரு மெசேஜ் அனுப்பி உள்ளார். அதில், ‘எனக்கு திருமணம் பிடிக்கவில்லை. என்னை யாரும் தேட வேண்டாம்’ என கூறியுள்ளார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த மணமகன் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானர்.

பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி செய்து வைக்கும் திருமணம் ஒரு இளைஞனின் வாழ்க்கையே கேள்விக் குறி ஆக்கியுள்ளது. திருமணத்தில் விருப்பம் இல்லாமல் திருமணத்தன்று மணப்பெண் ஓடிப்போன சம்பவம் அப்பகுதியில் பேசுபொருளானது.

## தி.மலையில் எல்லை தெய்வ வழிபாடு நிறைவு: வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகர் பவனி

திருவண்ணாமலை: நவ.25–

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு 3 நாட்கள் நடந்த எல்லை தெய்வ வழிபாட்டின் நிறைவாக, வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகர் பவனி வந்து அருள்பாலித்தார். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி எவ்வித இடையூறும்



இல்லாமல், பக்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் நடக்க வேண்டி கடந்த 3 நாட்களாக எல்லை தெய்வ வழிபாடு நடந்தது. அதன்படி, முதல் நாள் துர்க்கையம்மன் உற்சவமும், இரண்டாம் நாளான நேற்று முன்தினம் பிடாரியம்மன் உற்சவமும் நடந்தது. தொடர்ந்து, எல்லை தெய்வ வழிபாட்டின் நிறைவாக, நேற்று இரவு விநாயகர் உற்சவம் நடந்தது.

அதையொட்டி, அண்ணாமலையார் கோயில் 3ம் பிரகாரத்தில் அமைந்துள்ள சம்மந்த விநாயகர் சன்னதியில் நேற்று சிறப்பு பூஜை நடந்தது. இரவு வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகர் மாடவீதியில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். மேலும் ரிஷப வாகனத்தில் சண்டிகேஸ்வரரும் உடன் வலம் வந்தார். சுவாமி திருவீதி உலாவின்போது, விட்டு விட்டு லேசான மழை பெய்தது. ஆனாலும், மழையை பொருட்படுத்தாமல் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

# பழங்குடியினருக்கு நல வாரிய உறுப்பினர் அட்டை: எம்எல்ஏ வழங்கினார்.



வந்தவாசி, நவ 25:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் பழங்குடியினருக்கு நல வாரிய உறுப்பினர் அட்டையை வந்தவாசி எம்எல்ஏ எஸ்.அம்பேத் குமார் வழங்கினார். இதில் வந்தவாசி சத்யா நகர், கீழ்க்கொடுங்காலூர், வெடால், இராம சமுத்திரம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 200 பழங்குடியின குடும்பங்களுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சிக்கு வந்தவாசி வட்டாட்சியர் எஸ்.சம்பத் குமார் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தனி வட்டாட்சியர் மேனகா முன்னிலை வகித்தார். நிகழ்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உள்வட்ட ஆய்வாளர் தேவன், தமிழ்நாடு மலை வாழ் மக்கள் சங்க மாநில செயலாளர் சரவணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டார செயலாளர் அப்துல் காதர், மலைவாழ் மக்கள் சங்க மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகா, ஒருங்கிணைப்பாளர் சுகுணா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அரியலூர் மாவட்டத்தில் சிறுபான்மையினர் சிறப்புக்குழு ஆய்வுக்கூட்டம்

## திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.த.இனிகோ இருதயராஜ், தலைமையில் நடைபெற்றது.



அரியலூர், நவ. 25–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் சிறுபான்மையினர் சிறப்புக்குழு ஆய்வுக் கூட்டம் திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் .த.இனிகோ இருதயராஜ் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி , முன்னிலையில் (24.11.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பா கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் சிறுபான்மையினர் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்கள் கடைகோடியில் உள்ள மக்களுக்கும் சென்று சேருகிறதா என்பது குறித்தும், அவற்றை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்திடும் வகையில் இவ்வாணையம் உருவாக்கப்பட்டுள்ளது. பழைமை வாய்ந்த தேவாலயங்களிக் புனரமைப்பு பணிகளுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதற்கான நிதியினை ஒதுக்கி பல்வேறு மாவட்டங்களில் உள்ள தேவாலயங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணிகள் நடைபெறுவதையும் ஆய்வு செய்யவும் அறிவுறுத்தியுள்ளார்கள். அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயின்று கல்லூரி படிப்பை தொடரும் மாணாக்கர்களுக்கும் மாதாந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வைத்ததை தொடர்ந்து அவர்களும் உதவித்தொகையினை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதை தொடர்ந்து உதவித் தொகை மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்று வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் மக்களுக்கான அரசின் நலத் தி;ட்டங்கள் முறையாக கொண்டு சேர்க்கப்படுவது குறித்தும், கடந்த செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில், ஆணையத்தின் தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அக்கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது எண்ணிக்கை மற்றும் தீர்வு காணப்பட்டுள்ள மனுக்களின் விவரம் குறித்தும், தீர்வு காண வேண்டிய மனுக்கள் தொடர்பாகவும் தெரிவிக்கலாம். இதேபோன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற முகாம்களில் வழங்கிய மனுக்களின் விவரம், அதன் மீதுமேற்கொள்ளப் பட்டுள்ள துறை சார்ந்த நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை தெரிவிக்கலாம் என திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.த.இனிகோ இருதயராஜ் வேண்டும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, சிறுபான்மையினர் மக்களின் கோரிக்கையினை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்கினார். மேலும், நிலுவையில் உள்ள கோரிக்கை மனுக்களின் மீது விரைவாக ஆய்வு மேற்கொண்டு தீர்வுகாண வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட கிறுத்துவ மகளிர் உதவும் சங்கம் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ரூ.2,00,000 மதிப்பில் ஆடுவளர்ப்பு, பால் வியாபாரம், பெட்டிக் கடை உள்ளிட்ட சுய தொழில் அமைப்பதற்கான உதவித்தொகைகளையும், மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் திட்டத்தின் கீழ் 47 பயனாளிகளுக்கு ரூ.7,05,000 மதிப்பில் பிரியாணி கடை, டைலர் கடை, சூடம் போடுதல் பெட்டிக்கடை, சூடம் போடுதல் கடை வைப்பது உள்ளிட்ட சுயதொழில் அமைப்பதற்கான உதவித்தொகைகளையும், உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நலவாரியம் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு நலவாரிய அடையாள அட்டைகளும் என மொத்தம் 71 பயனாளிகளுக்கு ரூ.9,05,000 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.த.இனிகோ இருதயராஜ் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் முனைவர். சிவராமன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ) சுமதி, மாநில உபதேசியர்கள் நலவாரிய உறுப்பினர் ஜான்பிரகாஷ் எபிநேசர், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்...

## 255 மனுக்கள் வரப்பெற்ற நிலையில் மேல் நடவடிக்கைக்கு உத்தரவு...





ஈரோடு. நவ. 25

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற பொது மக்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த மனுக்கள் மீது உரிய மேல் நடவடிக்கைக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

வாரம் தோறும் திங்கள் கிழமை காலை 10 மணி அளவில் தமிழ்நாடு முழுவதும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் நேற்று காலை 10 மணி அளவில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்தார். கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, மகளிர் உரிமைத் தொகை, கணவரால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மற்றும் இலவச வீட்டு மனை, வீட்டுமனை பட்டா, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வழங்கப்படும் உதவிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே ஆட்சியரிடம் பொதுமக்கள் கோரிக்கை மனுவை.

அந்த வகையில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மொத்தம் 255 மனுக்கள் வரப்பெற்று, அவைகள் மேல் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டது.

மேலும் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ( பொது) முகமது குதுரத்துல்லா உள்பட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# துணை முதல்வர் தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வரும் ஊக்கத்தால், தேசிய அளவில் தமிழக மாணவர்கள் சாதித்து வருவதாக தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரஃபி பேச்சு




கோவை, நவ. 25–

கோவையில் ஷிட்டோரியூ கராத்தே தோ இந்தியா அமைப்பின் மாநில அளவிலான கராத்தே போட்டி சுங்கம் பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது..

அமைப்பின் தலைவர் கிருஷ்ணகுமார் மற்றும் பொது செயலாளர் ஆசாத் காமில் ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இதன் துவக்க விழாவில் ஆல் இந்தியா தலைவர் சசிதரன் தலைமை வகித்தார்..

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரஃபி, மற்றும் தி.மு.க.கோவை மாநகர் மாவட்ட செயலாளர் துரை செந்தமிழ் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்தனர்..

முன்னதாக விழாவில் பேசிய தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரஃபி, மாணவர்கள் கராத்தே போன்ற தற்காப்பு கலைகள் மற்றும் விளையாட்டுகளில் கவனம் செலுத்துவதால் ஒழுக்கம், மன தைரியம்,தன்னம்பிக்கை அதிகரிக்கும் என தெரிவித்தார்..

தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வர் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விளையாட்டு துறைகளில் தமிழக மணவர்களை தொடர்ந்து ஊக்கபடுத்தி வருவதாக தெரிவித்த அவர், உதயநிதி ஸ்டாலின் விளையாட்டு துறை அமைச்சராக பதவி ஏற்ற பிறகு தேசிய அளவில் நடைபெறும் எல்ல போட்டிகளிலும் தமிழக மாணவர்கள் ஜொலித்து வருவதாக கூறினார்..

தொடர்ந்து பேசிய அவர், கராத்தே விளையாட்டை தமிழக முதலமைச்சர் கோப்பை விளையாட்டில் இணைக்க வேண்டும் என வலியுறுத்தினார்..

நிகழ்ச்சியில், போத்தனூர் காவல் நிலைய ஆய்வாளர் அசோக் குமார்,, தி.மு.க.கோவை மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், ஜீவன்ஸ் குழுமங்களின் தலைவர் அப்துல் அஜீஸ், பல்சமய நல்லுறவு இயக்க ஒருங்கிணைப்பாளர் டிஸ்கோ காஜா,பகுதி செயலாளர் ஷேக் தாவூத், அன்னை மெட்ரிக் பள்ளி விக்டர்,ஜீவன்ஸ் பள்ளி இயக்குனர் சிவக்குமார், பாபு ,கோவை தல்ஹா உட்பட பலர் கலந்து கொண்டனர்..

# ஊத்துக்கோட்டை மேலகரமனூர் கிராமத்திற்கு 2 கி.மீட்டர் சாலை மற்றும் வயலூர் முதல் சூரகாபுரம் வரை 3கி.மீட்டர் தூரத்திற்கு சீரமைக்க வலியுறுத்தி முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா மாவட்ட ஆட்சியரிடம் புகார்



திருவள்ளூர் நவ 25

வடகிழக்கு பருவமழையில் திருவள்ளூர் மாவட்டத்தில் பெரும்பாலான சாலைகள் சேதமடைந்தன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் பூண்டி, கடம்பத்தூர் ஒன்றியங்களில் உள்ள பாதிப்புகளை சீரமைக்க வலியுறுத்தியும், திருவள்ளூர் நகராட்சி நேதாஜி சாலையில் மேடாகவும் தாழ்வாகவும் பொது மக்களுக்கு இடைஞ்சலாக மழைநீர் கால்வாய் அமைப்பது குறித்து ஆய்வு செய்ய வலியுறுத்தி முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளருமான பி.வி.ரமணா மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தார்.

மேலும் பூண்டி ஒன்றியம் மேலகரமனூர் முதல் ஊத்துக்கோட்டை வரை 2 கி.மீட்டர் சாலையை சீரமைக்க பலமுறை கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட சாலைகள் சேதமடைந்ததை சீரமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். அதே போல் கடம்பத்தூர் ஒன்றியத்திற் குட்பட்ட வயலூர் முதல் சூரகாபுரம் வரை 3கி.மீட்டர் தூரத்திற்கு சீரமைக்க வலியுறுத்தியும், வடகிழக்கு பருவ மழையால் தற்போது சேதமடைந்த சாலைகளை சீரமைக்க வலியுறுத்தி பல முறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவித்தார். அப்போது, ஒன்றிய செயலாளர்கள் ராமஞ்சேரி எஸ்.மாதவன், சூரகாபுரம் சுதாகர் மற்றும் பூண்டி ஒன்றிய குழு முன்னாள் தலைவர் வெங்கட்ரமணா, மாவட்ட மாணவரணி செயலாளர் பி.வி.பாலாஜி, நகர செயலாளர் கந்தசாமி உள்பட பலர் உடனிருந்தனர்.



சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தேசிய அளவில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி சேலம் கிளையின் சார்பில் ரூ.2.50 லட்சம் மதிப்பில் 4 விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு சக்கர நாற்காலியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் பொன்மணி, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், உதவி ஆட்சியர் விவேக்யாதவ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.

# கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்: தவெக நிர்வாகிகள் சிபிஐ அலுவலகத்தில் ஆஜர்",

"சென்னை, நவ.25–

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் குழுவினர் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் ஏற்கனவே போலீஸ் இன்ஸ்பெக்டர், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் உள்பட போலீசார், பொதுமக்கள் என ஏராளமானோருக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடைபெற்றது இதேபோல சம்பவத்தின் போது செயல்பாட்டில் இருந்த தனியார் ஆம்புலன்ஸ் டிரைவர்கள் மற்றும் உரிமையாளர்கள் என 25க்கும் மேற்பட்டோர் சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜராகினர். மேலும் மின் வாரிய அதிகாரிகள், பவர் கிரிட் நிறுவன அதிகாரிகளிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். இதனைதொடர்ந்து காயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில், கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக தவெக பொதுச்செயலாளர் என்.ஆனந்த், நிர்வாகிகள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் ஆகியோர் சிபிஐ விசாரணைக்கு ஆஜராகியுள்ளனர். அவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் கரூர் சம்பவம் குறித்து தவெக நிர்வாகிகள் விளக்கம் அளித்து வருகின்றனர்.",

# உதகை அருகே மாவனல்லா கிராமத்தில் புலி தாக்கி பெண் உயிரிழப்பு!!

உதகை : நவ,25

உதகை அருகே மாவனல்லா கிராமத்தில் புலி தாக்கி பெண் உயிரிழந்தார். தனியார் நிலத்தில் சிக்கி என்ற பழங்குடியின பெண் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார். மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது, பின்னால் வந்த புலி, பெண்ணை கடித்து இழுத்துச் சென்றது. அகழிக்குள் புலி இழுத்துச் சென்ற நிலையில் பழங்குடியின பெண் உடலை வனத்துறையினர் மீட்டனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421